செய்தி வெளியீடு எண்:843 நாள்:06.10.2021

## செய்தி வெளியீடு

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி வணிகவரித் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக அத்துறையில் நிர்வாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக பல வருடங்களாக ஒரே இடத்தில் பணியாற்றிவரும் அலுவலர்களுக்கு பணியிடமாற்றம் அளிக்கப்பட்டு வரும் நிலையில் ஒரே மண்டலத்தில் பத்து வருடங்களுக்கு மேலாக பணி புரிந்து வந்த முப்பது ஓட்டுநர்களை வெவ்வேறு மண்டலங்களுக்கு பணியிட மாற்றம் செய்து வணிகவரித் துறை ஆணையர் உத்தரவிட்டுள்ளார். வணிகவரித் துறையின் மறு சீரமைப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9